மனித உரிமைகளே தீர்வுகளுக்கான வழிகளாகும்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் வோல்கர் டுர்க் அவர்களின் உரை

கொழும்பு, இலங்கை, 24 ஜூன் 2025.

மாண்புமிகு அரச உறுப்பினர்களே,
மேன்மைதங்கிய அதிதிகளே,
பங்குதாரர்களே , சகாக்களே மற்றும்
நண்பர்களே,
ஆயுபோவன். வணக்கம். அஸ்ஸலாமு அலைக்கும்.

எதிர்காலத்திற்கான அதன் புதிய நம்பிக்கைகளை கொண்டதும், மொழி மற்றும் நம்பிக்கை மரபுகள் நிறைந்ததுமான, வளமான மக்களையும் கொண்ட இந்த அழகான, பசுமையான தீவில் நிற்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்,

இந்த நாட்டிற்கும், உலகிற்கும் முக்கியமான ஒரு தருணத்தில் நாம் ஒன்றாகக் கூடியிருக்கிறோம். அதிர்ச்சியூட்டும் மனித உரிமை மீறல்களும், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதில் அரசாங்கங்கள் காண்பிக்கும் பலவீனமும், ஒருமுகமற்ற உறுதிப்பாடும், சர்வதேசச் சட்டத்தின் மீது உள்ள நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது.

இதன் நேரடி விளைவாக, காசா, உக்ரைன், சூடான், மியான்மர் உட்பட பல நாடுகளை என்னால் குறிப்பிட முடியும். இந் நாடுகளில் உள்ள பொதுமக்கள் அனுபவிக்கும் கொடூரமான மற்றும் தவிர்க்கக்கூடிய துன்பங்கள், பல தலைமுறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆழமான காயங்களை உருவாக்குகின்றன.

உறுதியான சட்டங்கள் இல்லையென்றால், வன்முறையும் அழிவும் கட்டுக்கடங்காமல் பெருகும் என்று நூற்றாண்டுகால மனித அனுபவம் நம்மை எச்சரிக்கிறது. மனித உரிமைகளை மதிக்காமல், வலிமையானவர்கள் தாங்கள் விரும்பியதைச் செய்கிறார்கள், அதே நேரத்தில் பலவீனமானவர்கள் ஒடுக்குமுறைக்கு ஆளாகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனின் சமத்துவம் மற்றும் உரிமைகளில் வேரூன்றிய நீதிதான் கட்டுப்பாடற்ற அதிகாரம், சிறப்புரிமை, சுரண்டல் மற்றும் வன்முறையிலிருந்து நம்மை பாதுகாக்கிறது.

அல்லது, மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனத்தில் கூறுவது போல்: "மனித குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களின் உள்ளார்ந்த கண்ணியம் மற்றும் சமமான பறிக்க முடியாத உரிமைகளை அங்கீகரிப்பதே உலகில் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அடித்தளமாகும்". இந்த தெளிவான, வலுவான வாக்கியம் ஆழமான மதிநுட்பத்தைவெளிப்படுத்துவதுடன் உலகின் அனைத்து ஆன்மீக மற்றும் நம்பிக்கை மரபுகளையும் உள்ளடக்குகின்றது.

மனித உரிமைகள்ளே போர்களில் இருந்து விடுபட்டு செல்லும் பாதையின் அடித்தளமாகும்; மக்களின் துயரங்கள் துக்கங்கள் மற்றும் வன்முறைகளிலிருந்து விடுபடும் வழி; மக்கள் அமைதியுடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய, சமத்துவமான சமூகங்களுக்கு வழிவகுக்கும் தீர்வுகளுக்கான தெளிவான பார்வையை மனித உரிமைகள் வெளிக்காட்டுகின்றன. ஐ.நா. சாசனமும் "விசாலமான சுதந்திரத்தைப்" பற்றி குறிப்பிடுகின்றது.

இந் நாட்டில், அமைதி எவ்வளவு பெறுமதிப்பானது என்பதும், அதை நிலைநாட்ட என்ன தேவை என்பதும் தெளிவாக புரிகிறது.

மதிப்பிற்குரிய விருந்தினர்களே,

உலகெங்கும், அரசாங்கங்களும் மக்களும், சிறந்த சட்டம், நிலையான அபிவிருத்தி மற்றும் அமைதி ஆகியவற்றின் அடித்தளமாக இருக்கும் உலகளாவிய மதிப்புக்களுக்காக ஒன்றாக எழுந்து நிற்க வேண்டிய நேரம் இது.

மனிதர்கள் பிறக்கும்போது சுதந்திரமாகவும் சம உரிமைகளுடனும், கண்ணியத்துடனும் பிறக்கின்றனர். இது மனித உரிமைகளின் தீவிரமான அபிலாஷையாகும்.

இஸ்ரேலில் வாழும் குழந்தைக்கு உரிய அதே உரிமைகள், காசாவில் வாழும் ஒரு குழந்தைக்கும் உரித்தாகும். அதே உரிமைகள், இலங்கையில் வாழும் எல்லா நபர்களுக்கும், எல்லா சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் உரித்தானது.

கருத்துச் சுதந்திரம், அமைதியான ஒன்றுகூடல் மற்றும் முடிவெடுப்பதில் பங்கேற்பது போன்ற உரிமைகள் இதில் அடங்கும். பாகுபாடு இன்றி ,சித்திரவதை அச்சுறுத்தல் இல்லாதிருப்பதற்கான உரிமை, நீதியை நாடும் உரிமை மற்றும் ஏற்படுத்தப்பட்ட தீங்குகளுக்காக உண்மையான பொறுப்புக்கூறலை பெற்றுக்கொள்ளும் உரிமை ஆகியவை இதில் அடங்குகின்றன. மனித கண்ணியத்தை உறுதி செய்யும், போதிய உணவு, சுகாதார பராமரிப்பு, வீடமைப்பு ஆகியவற்றிற்கான உரிமைகள் மற்றும் அத்தியாவசியமான பொருளாதார மற்றும் சமூக உரிமைகளும் இதில் அடங்குகின்றன.

இந்த உரிமைகள் மனிதர்கள் என்ற முறையில் நமக்கு உரியது. கொடுங்கோன்மையிலிருந்தும், கட்டுப்பாடற்ற வன்முறையிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கும் இன்றியமையாத கூறுகளும் இவைதான்.

எனவே, உலகெங்கிலும் பெருகிவரும் மோதல்கள் மற்றும் அதிகரித்து வரும் துயரங்களை எதிர்கொண்டு, **மனித உரிமைகளையும், அவற்றிலிருந்து உருவாகும் ஒப்புக்கொள்ளப்பட்ட சர்வதேச நீதியையும் ஆற்றலுடனும் தொடர்ச்சியாகவும் பாதுகாக்குமாறு அனைத்து நாடுகளையும் நான் தொடர்ந்து கேட்டுக்கொள்கிறேன். உரிமைகளும் சட்டமும் ஒன்றிணைந்தவை.**

மேன்மைதங்கிய, அதிதிகளே,
சிக்கலான மற்றும் வன்முறை நிறைந்த எமது உலகத்தில் , இலங்கை கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகள் இருக்கலாம் - அதே போல் இலங்கையிடமிருந்து உலகம் கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினைகளும் இருக்கலாம்.

இன்று இந்த அழகிய தீவு, பல தசாப்தங்களாக நிலவிய பிரிவினை மற்றும் வன்முறையிலிருந்து மீண்டு வருகிறது - மேலும் ஆழமான பொருளாதார நெருக்கடியையும் கையாண்டு வருகிறது.

இலங்கை மனித ஆற்றலின் மகத்தான வாக்குறுதி கொண்ட ஒரு நாடாகும். கடினமான அழுத்தங்களும் அதிர்ச்சிகளும் தொடர்ந்து இருந்தபோதிலும், தனது ஜனநாயகத்தை இலங்கை பாதுகாத்து வந்துள்ளது. மேலும், உலகளாவிய கல்வியில் முதலீடு செய்து, இளம் தலைமுறையினை விலைமதிப்பற்ற வளமாக மாற்றி வந்துள்ளது.

இருந்தும் இலங்கை தற்போது இரண்டு பிடிகளில் சிக்கி அச்சுறுத்தப்பட்டு வருகிறது: **அவை தண்டனையின்மை, மற்றும் சமத்துவமின்மை என்பவையாகும்.**

அப்பிடிகளில் இருந்து மீள்வதற்கான வழியை இலங்கையர்களே கண்டறிய வேண்டும். இந்த பயணத்தில் உங்களை ஊக்குவிக்கவே நான் இங்கு வந்துள்ளேன். இப்பிடிகளில் இருந்து மீள்வதற்கு மனித உரிமைகள் தீர்வுகளின் மூலம் எவ்வாறு வழிகாட்ட முடியும் என்பதையும், கடந்த கால பிளவுகளை சமாளிக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும், இன்று நான் உங்களிடம் முன்வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, தண்டனையின்மை. பல்வேறு நாடுகள் பல ஆண்டுகளாக போர், உள்நாட்டு ஆயுத மோதல் அல்லது அடக்குமுறையை அனுபவித்துள்ளன. ஒரு சில நாடுகளால் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடிந்துள்ளது. வன்முறை மற்றும் பிரிவினையால் கிழிந்த மற்றும் முடிச்சுப் போடப்பட்ட ஒரு சமூகத்திலிருந்து, அவர்கள் மரியாதை என்ற துணியை பின்னியுள்ளனர் - அமைதியான வழிகளில் சச்சரவுகளைத் தீர்க்கும் மற்றும் உள்ளடக்கத்தின் மூலம் நல்லிணக்கத்தைப் பாதுகாக்கும் ஒரு சமூக ஒப்பந்தத்தை அவர்கள் உறுவாக்கியுள்ளனர்.

வட அயர்லாந்து, காம்பியா, டிமோர் லெஸ்டே, லைபீரியா, சியரே லியோன், கொலம்பியா ஆகிய நாடுகளின் முயற்சிகளை நாம் சில உதாரணங்களாக எடுத்துக்கூறலாம். இந் நாடுகள் மட்டுமல்லாது, கொடூரமான நிற ஒதுக்கீட்டுக் கொள்கையில் இருந்து தென்னாப்பிரிக்கா மீண்டதையும் நாம் இன்னுமொரு உதாரணமாகப் பார்க்கலாம்.

இப்பணியை மேற்கொள்வதில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் குரல்கள் மற்றும் உரிமைகள் மீது ஒரு நிலையான, அசைக்க முடியாத கவனம் செலுத்தப்பட வேண்டும். **உண்மைக்கான ஆணைக்குழுக்கள், நினைவேந்தல் நிகழ்வுகள்**, மற்றும் **பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் ஆகியவை** நிலைமாறுகால நீதியில் முக்கிய பங்காற்றுகின்றன. இருப்பினும், **மிகவும்**

கடுமையான குற்றங்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூற வைப்பது அத்தியாவசியமாகும். *நீதியை நிலைநாட்ட இது அவசியம். மீறல்களை தடுப்பதற்கும் இது அவசியம்.*

அளவிடமுடியாத வலியையும் இழப்பையும் அனுபவித்த பாதிக்கப்பட்டவர்களுக்கு இது அவசியம்.

எதிர்காலத்திற்கும் இது அவசியம்.

தேசங்களையும் உயிர்களையும் மீண்டும் மீண்டும் சிதைக்கும் வன்முறையின் கோரப்பிடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க – சமூகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைந்த எதிர்கால உணர்வை மீண்டும் நெசவு செய்ய – என்ன நடந்தது என்ற உண்மையைப் பற்றிய பகிரப்பட்ட உணர்வும், நீதி வழங்கப்படுகிறது என்ற பகிரப்பட்ட நம்பிக்கையும் இருக்க வேண்டும்.

ஒரு ஆஸ்திரியன் என்ற வகையில், நிலைமாறுகால நீதியின் சவால்களை என்னால் நன்றாக புரிந்துகொள்ள முடியும். , நாட்ஸிக்களால் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் என்னுடைய சக ஆஸ்திரியர்கள் என்று சிறு வயதில் நான் அடிக்கடி கேள்விப்பட்டுள்ளேன்: அது எல்லோருக்கும் ஆறுதலளித்த ஒரு பொய் ஆகும்.

விரிவாகப் பேசினால், 1980 கள் வரை - அதாவது நாட்ஸிக்களின் எழுச்சிக்கு 50 ஆண்டுகளுக்குப் பிறகு - எனது நாட்டு மக்கள் இறுதியாக நடந்த உண்மையை எதிர்கொண்டனர்: ஆஸ்திரியர்களும் கொடூரமான குற்றங்களைச் செய்திருந்தனர் - அக்குற்றங்களுக்கு அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள படுகொலைகள், பயங்கரவாதம், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் , சித்திரவதை அல்லது பாலியல் வன்முறைகள் போன்ற சம்பவங்களை ஏற்றுக்கொள்வது, மிகவும் வேதனையானது என்பதை நான் அறிவேன்.

ஆனால், பாதிக்கப்பட்டவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் இழைக்கப்பட்ட குற்றங்களை, அனைத்துத் தரப்பினரும் ஒப்புக் கொள்ளாதபோது, துக்கமும் விரோதமும் அதிகரிக்கும்.

தண்டனையின்மை எனும் பிடியின் ஆழம் அதிகரிக்கிறது.

அட்டூழியக் குற்றங்களை மறுக்கும் அல்லது நியாயப்படுத்தும் நோக்கில்நடந்த கதைகளை மனிதர் திரிவுபடுத்துவர். , மேலும் அதற்குப் பொறுப்பானவர்களை மகிமைப்படுத் தவும் செய்வர்.

எந்தப் பலனையும் தராத விசாரனைகளினாலும், ஆணைக்குழுக்களின் செயல்படுத்தப்படாத பரிந்துரைகளினாலும் பொதுமக்களின் நம்பிக்கை குறைவதுடன்,, பாதிக்கப்பட்டவர்களின் துன்பமும் துயரமும் அதிகரிக்கும்.

இந்த விடயத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்: ***நீதியின்மை அமைதியின் நிலையாண்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.***

மாறாக, உண்மையை ஒப்புக்கொள்வது நீதியையும், இழப்பீடுகளையும் பெறு வதற்கான வாய்ப்பையும் உருவாக்குவதுடன், துயரங்களில் இருந்து மீள்வதற்கும் வழிவகுக்கும்.

பொறுப்புக்கூறல் மற்றும் நீதி உட்பட நடந்த உண்மையை முழுமையாக ஏற்றுக்கொள்வது, நிலையான நல்லிணக்கத்திற்கான பாதையை வடிவமைக்கும்.

இது அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான அபிவிருத்தியிற்கும் இன்றியமையாததாகும். நாம் இவற்றை வெவ்வேறாக பிரித்துப் பார்க்க முடியாது.

மதிப்பிற்குரிய விருந்தினர்களே, அன்பு நண்பர்களே,

இரண்டாவது பிடி என்னவென்று பார்போம்: ***ஏற்றத்தாழ்வுகளும் பொருளாதார நெருக்கடிகளும்*** *சமூகப் பிளவுகள் மற்றும் வன்முறையுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளன.*

ஐக்கிய நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளின் பின்னணியில், பெரும்பாலும் பொருளாதார, சமூக, கலாச்சார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த மீறல்களாக நிகழ்வதை நாம் காண்கிறோம்.

பெரும்பாலான நெருக்கடிகளில் சகிக்க முடியாத பொருளாதார துயரம் பொதுவானதாக காணப்படுகிறது, இது மக்களை அந்நியப்படுத்துவதுடன், கைவிடப்பட்டவர்கள் போல உணரச் செய்கிறது; இதனால் அவர்களது அவநம்பிக்கை மேலும் அதிகரிக்கிறது.

மோதலும் பிரிவினையும், பொருளாதார வீழ்ச்சியை மேலும் ஆழப்படுத்துவதுடன், ஊழலுக்கான சூழ்நிலைகளை உருவாக்குவதனால் மக்களின் நம்பிக்கை மேலும் சீரழிகின்றது.

ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படையாக இருக்கும் பாகுபாட்டை அரசாங்கங்கள் முன்வந்து அகற்ற முடியும். இந்த நோக்கத்தில், ஏற்கனவே பலர் முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். அதன் விளைவாக, பொருளாதார வளர்ச்சி, கல்வி முன்னேற்றம் மற்றும் வாழ்வுவளம் போன்ற துறைகளில் அனைவருக்கும் அதிகளவான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பொருளாதாரம் மற்றும் வணிகம் தொடர்பான அனைத்து கொள்கைகளிலும், அரசாங்கங்கள் **மனித உரிமைகளை மையமாகக் கொண்டு செயல்பட முடியும்**. இது தரமான கல்வி மற்றும் சுகாதார சேவைகளை நோக்கி மக்களின் அணுகலை மேம்படுத்தும் வகையில் முதலீடு செய்வதிலிருந்து ஆரம்பிக்கலாம். மேலும், உலகளாவிய அளவில் சமூக பாதுகாப்பு, ஒழுங்குமிக்க வேலைவாய்ப்புகள், உணவு, தூய்மையான குடிநீர், சுகாதார வசதிகள், வீடமைப்பு மற்றும் சுத்தமான, ஆரோக்கியமான மற்றும் நிலையான சுற்றுச்சூழலை உறுதி செய்வது போன்றவையும் அடங்கும்.

இந்த உரிமைகள் வலுவான பொருளாதாரத்தையும் ஆரோக்கியமான சமூகங்களையும் கட்டியெழுப்புகின்றன. மாறிவரும் இன்றைய உலக பொருளாதார சூழலில், மக்களை கடுமையான வறுமையிலிருந்து பாதுகாக்கவும், அவர்களின் தற்காலிக சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான ஆதரவுகளையும் வழங்கி உதவுகின்றது.

மேலும் வளர்ந்து வரும் நாடுகளில் ஏற்கனவே நிரூபிக்கப்பட்டது போல், இத்தகைய சமூக பாதுகாப்புத் திட்டங்கள், **குறைந்த செலவில்** நடைமுறைப்படுத்த முடியும். அனைத்து குழந்தைகளுக்கும் மாதாந்த கொடுப்பனவு வழங்குதல், குழந்தை பெற்ற பெண்களுக்கு மகப்பேறு நன்மைகள், கடுமையான குறைபாடுகளுடன் வாழும் மக்களுக்கு உரிய நிவாரணங்கள், மேலும் அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும் ஒரு உலகளாவிய சமூக பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்த, ஒரு வளர்ந்து வரும் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சராசரியாக 1.6% மட்டுமே செலவாகும் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) கணித்துள்ளது. நடக்கவிருக்கும் உலக சமூக உச்சிமாநாட்டில், விவாதிக்கப்படும் விஷயங்களின் ஒரு முக்கிய பகுதியாக இது இருக்கும் என எதிப்பார்க்கின்றேன்.

மனித உரிமைகள் பொருளாதாரத்தின் இந்த அத்தியாவசிய அம்சங்களுடன் இணைந்து, பல நாடுகள் தங்கள் செயல்பாடுகள் மற்றும் விநியோகச் சங்கிலிகளில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்த வணிக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

பொது நிதியிலிருந்தும் பொது நலனிலிருந்தும் தனியார் இலாபத்திற்காக திருடப்படும் ஊழலை அவர்கள் நேரடியாக கையாண்டுள்ளனர்.

இந்த துறைகளில் அரசாங்கங்களுக்கு ஆதரவளிக்க ஐக்கிய நாடுகள் பல திட்டங்களைக் கொண்டுள்ளது.

மனித உரிமை முதலீடுகளுக்கு பெரும் தடையாக இருக்கும் அதிக கடன் சுமைகளிலிருந்து இலங்கை உள்ளிட்ட பல நாடுகளை விடுவிக்க, சர்வதேச நிதி நிறுவனங்களில் உலகளாவிய சீர்திருத்தங்களின் அவசியத்தையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அமைச்சர்களே, சக ஊழியர்களே, மற்றும் நண்பர்களே,

மனித கௌரவம், நீதி மற்றும் உரிமைகளை மேம்படுத்துவதற்காக எனது அலுவலகம் இலங்கையில் 21 ஆண்டுகளாக பணியாற்றியுள்ளது.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததிலிருந்து, பாகுபாடு இல்லாத மிகவும் சமத்துவமான சமூகத்தை நோக்கிய முன்னேற்றத்தை நாங்கள் ஆதரித்து வருகிறோம். வெளிப்படையான, பொறுப்புள்ள நிறுவனங்களுடன் கூடிய, முடிவெடுப்பதிலும் பொது வாழ்விலும் மக்களின் அர்த்தமுள்ள பங்கேற்பும் அவசியம் என்பதை நம்புகிறோம். பல மீறல்களுக்கு அடிப்படையாக இருக்கும் சிக்கலான சட்டங்களை சீர்திருத்துவது தொடர்பாகவும் நாங்கள் ஆலோசனைகள் வழங்கியுள்ளோம்.

வெவ்வேறு குரல்களை, **அதாவது பல மொழிகளில் பேசுபவர்களை** அல்லது மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களை வரவேற்கும் சமூகங்கள் செழித்து வளர அதிக வாய்ப்புள்ளது. **பரந்த சுதந்திரமான குடியியல் சூழலும்**, சுயாதீனமாக செயல்படும் ஊடகங்களும் எந்த நாட்டுக்கும் வெறும் வரப்பிரசாதமாக மட்டுமல்லாமல்; ஆரோக்கியமான, நெகிழ்வான பொருளாதாரத்தையும் வலுவான நிறுவனங்களையும் உருவாக்கும் முக்கிய தூண்களாகவும் திகழுகின்றன.

பெண்களின் முழுமையான பங்கேற்பு பொருளாதார வளர்ச்சிக்கும், சமாதானத்தின் நிலைநிறுத்தத்துக்கும், மேலும் சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் இன்றியமையாதது. ஒரு விரிவான உலகளாவிய ஆய்வில், சமாதான முன்னெடுப்புகளில் பெண்களின் பங்கேற்பு 35 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், இது 15 ஆண்டுகள் நீடிக்கும் சமாதான உடன்படிக்கைகளுக்கான முக்கிய நிகழ்வாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும், கல்வி, சுகாதாரம் முதல் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வரை வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அமைதியைக் கட்டியெழுப்புவதில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். தற்போதைய பாராளுமன்றத்தில் பெண்களுக்கு அதிக ஒதுக்கீடு இருப்பதை நான் கவனித்தேன். நிச்சயமாக இந்நிலைமை இன்னும் முன்னேற்றமடைய முடியும். இந்த திசையில் செல்வது மிகவும் நல்லது. இங்கு, மற்ற நாடுகள் போலவே, பெண்கள் மற்றும் சிறுமிகளின் சமத்துவம் மற்றும் உரிமைகளை மேம்படுத்த எனது அலுவலகம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும்.

இந்த நாட்டில் **பொறுப்புக்கூறலை மேம்படுத்தி நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக,** நாங்கள் எங்கள் பணிகளை தொடர்வோம். நாங்கள் பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கு உதவக்கூடிய தகவல்களை தொகுத்து பகுப்பாய்வு செய்துள்ளதோடு எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கு உதவி செய்ய தயாராக உள்ளோம். மேலும் நிலைமாறுகால நீதி அணுகுமுறையின் முக்கிய கூறுகள் குறித்து நாங்கள் ஆலோசனை வழங்கியுள்ளோம்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் சுயாதீனமான வகிபாகத்தை பலப்படுத்துவதற்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் முறைமையுடன் அரசாங்கத்தின் ஈடுபாட்டிற்கும் நாம் ஆதரவளித்துள்ளோம். எங்களுடனும் ஒட்டுமொத்த அமைப்புடனும் ஈடுபடுவதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

மனித உரிமைகள் என்பது தூரத்திலிருந்து ஆபத்தான முறையில் சுழற்றி வீசப்படும் ஒரு தடியைப் போலவே சிலர் எண்ணக்கூடும்.

ஆனால் மனித உரிமைகள் என்பது உங்களைப் பற்றியது, இலங்கையர்களாகிய உங்களைப் பற்றியது. அவை உங்கள் கவலைகள், உங்கள் உரிமைகள், உங்கள் சுதந்திரம் மற்றும் உங்கள் வாழ்க்கையைப் பற்றியது.

நாங்கள் இந்த நாட்டிற்கு ஒரு கண்ணாடியை கொண்டு வருகிறோம். அது சில நேரங்களில் பார்க்க கடினமான படங்களை காட்டக்கூடும் — கண்ணாடிகள் போலவே — ஆனால் அது எப்போதும் உங்களைப் பற்றிய உண்மையையே பிரதிபலிக்கும்.

மிகவும் நியாயமான, சமூகம் மற்றும் மிகவும் மனிதாபிமான ஒரு புதிய சமூக ஒழுங்கை நோக்கிய இலங்கையர்களின் அபிலாஷைகளே, 2022 அரகலய போராட்டத்தில் அனைத்து சமூகங்களையும் அனைத்து தரப்பு மக்களையும் ஒன்றிணைத்தது.

அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளை ஆதரிப்பதற்காகவும், இன்று மாலை நான் எழுப்பிய சில பிரச்சினைகளை முன்னேற்றுவதற்காகவும், எனது அலுவலகம் மற்றும் பரந்த அளவில் ஐக்கிய நாடுகள் சபையும் எவ்வாறு சிறந்த ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் என்பது குறித்து இந்த வாரம் அரச உறுப்பினர்கள் மற்றும் பல மாறுபட்ட பங்குதாரர்களுடன் நான் கலந்துரையாடவுள்ளேன்.

மனித உரிமைகளை ஊக்குவிக்கும் மற்றும் சமத்துவமின்மை மற்றும் ஊழலுக்கு எதிராகப் போராடும் பொருளாதாரத் தலைமை நமக்குத் தேவை.

மக்கள் தங்கள் குடியியல் உரிமைகளை அனுபவிக்கக்கூடிய ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த சமூகம் நமக்குத் தேவை. மேலும், உண்மையை வெளிப்படுத்துதல் மற்றும், பொறுப்பேற்க வைத்தல் ஆகிய கடினமான பணியையும் மேற்கொள்ள வேண்டும்.

மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கவும், கௌரவிக்கவும், இந்த ஒப்பற்ற அழகான நாட்டின் மக்களுக்கு நல்லிணக்கத்தைக் கொண்டுவரக்கூடிய நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் நான் இங்கு வந்துள்ளேன்.

இலங்கை ஒரு முக்கியமான தருணத்தில் உள்ளது. இது ஒரு புதிய அத்தியாயமாகவும் புதிய வாய்ப்பாகவும் இருக்கலாம். மக்கள் முழு நம்பிக்கையுடன் உள்ளனர் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து

மட்டங்களிலும் உள்ள தங்கள் தலைவர்களிடமிருந்து உண்மையான அர்ப்பணிப்புகளை எதிர்பார்க்கிறார்கள்.

ஆழமடைந்து வரும் உலகளாவிய அச்சுறுத்தல்களின் பின்னணியில், ஒரு சமூகம் வன்முறையிலிருந்து பின்வாங்கி, மரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வாழ்வுவளம் மற்றும் அமைதியை நோக்கிய ஒரு புதிய பாதையை உருவாக்க முடியும் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டும் திறன் இந்த நாடுக்கு உள்ளது.

-நன்றி-